**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**C.C. No: 7/2026**
**Dated: 03.06.2026**
**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.ஹேமலதா** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் மது விலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.10.2025-ம்தேதி நிலைய அலுவலில் இருக்கும்போது 13.00 மணிக்கு கிடைத்த ரகசிய தகவலாளி என்னிடம் கொடுத்த தகவலில் 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் ஆலம்பாடி சமத்துவபுரம், ஆர்ச் அருகே கஞ்சா விற்பதாக தகவலாளி என்னிடம் நேரில் வந்து தகவல் கொடுத்தார். அதனை நான் 13.00 மணிக்கு பொது நாட்குறிப்பில் பதிவு செய்து மது விலக்கு அமலாக்க பிரிவு காவல் கூடுதல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து அவர்களிடம் முன் அனுமதி

பெற்றும் காவல் நிலையத்திலிருந்த தலைமை காவலர் 1018 அழகுவேல் 1660 திரு.மாதேஸ்வரன் தலைமை காவலர் 378 திரு.லெட்சுமணன் ஆகியோர்கள் போலீஸ் பார்ட்டியுடன் ரகசிய தகவலாளியை உடன் அழைத்து கொண்டும் போதை பொருள் சம்பந்தமான உபகரணங்களை எடுத்து கொண்டு நிலையத்திலிருந்து புறப்பட்டு சம்பவ இடத்திற்கு 14.00 மணிக்கு சென்று கண்காணிக்க சுமார் 14.20 மணிக்கு 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் கையில் சாக்கு பையுடன் நின்று கொண்டிருந்தார். அந்த நபரை தகவலாளி அடையாளம் காட்டி மறைய மேற்படி நபர் காவலர்களாகிய எங்களை கண்டதும் ஓட முற்பட்டவரை போலீஸ் பார்ட்டி சகிதம் பிடித்து மது விலக்கு காவல் ஆய்வாளர் என்று என்னை அறிமுகம்படுத்தியும் மற்ற காவலர்களை அறிமுகம்படுத்தியும் மேற்படி நபரை விசாரிக்க அந்த நபர் அவரது பெயர் டால்டா கண்ணன் என்ற ராஜீவ், வயது.35, த/பெ.செல்வராஜ், ஆலம்பாடி ரோடு என்று தெரிவித்தவரிடம் தாங்கள் கஞ்சா என்ற போதை பொருளை விற்பனை செய்வதாக எங்களுக்கு தகவல் வந்துள்ளது. தங்களை சோதனை செய்ய வேண்டுமென்று சோதனை சம்மத கடிதம் 14.30 மணிக்கு தயார் செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் காவலர்கள் 1460 மாதேஸ்வரன், 1018 அழகுவேல் ஆகியோர் முன்னிலையில் மேற்படி நபரிடம் ஒப்புதல் பெற்று நகல் வழங்கினேன். எதிரி வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையை சோதனையிட அதில் உதிரியாகவும், காய்ந்து நொருங்கிய நிலையில் விதை,

இலை, பூ, மொட்டு, தண்டுடன் கூடிய கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது. அதிலிருந்து ஒரு சிட்டிகை எடுத்து நெருப்பு வைத்து பார்க்க அதில் கஞ்சா வாடை அடித்தது. 14.45 மணிக்கு கைது அறிவிப்பு கடிதம் தயார் செய்து சாட்சிகள் முன்னிலையில் எதிரியிடம் ஒப்புதல் பெற்றேன். 15.00 மணிக்கு எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து எதிரியிடம் 15.30 மணிக்கு சாட்சிகள் திரு.மாதேஸ்வரன், அழகுவேல் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.30 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த கஞ்சாவை பிளாஸ்டிக் கவருடன் எடை மிசினில் எடை போட்டு பார்க்க அதில் 1.100 கிகி அளவு இருந்தது. சாட்சிகள் திரு.மாதேஸ்வரன், அழகுவேல் ஆகியோர் முன்னிலையில் அதனை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சோதனை செய்வதற்கான **முன் அனுமதி கடிதம் தாக்கல் செய்கிறேன். அது அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துடன் 17.30 மணிக்கு காவல் நிலையம் வந்து மது விலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.130/2025 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii) (B) of NDPS Act-ன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை நிலைய பாரா வசம் ஒப்படைத்தும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் தடய சொத்தினை படிவம் 95ன்படி இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். அதற்கான **படிவம் 95 அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சாட்சிகள்

த.கா.அழகுவேல், மாதேஸ்வரன், லெட்சுமணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 18.11.2025-ம் தேதி தலைமை காவலர் திரு.விக்னேஷ் என்பவரை நீதிமன்றத்திலிருந்து தபால் பெற்று தடயத்தை பகுப்பாய்விற்கு திருச்சி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க கடவு சீட்டு கொடுத்து நடவடிக்கை எடுத்தேன்.29.11.2025-ம் தேதி திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட ஆய்வு அறிக்கையை பெற்றேன். அந்த **பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான அறிவியல் அலுவலர் திருமதி. கலைவாணி அவர்களை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி பகுப்பாய்வு அறிக்கையை பெரம்பலூர் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்தேன். அந்த கஞ்சா என்ற போதை பொருளை மனிதன் பயன்படுத்தினால் மனிதனுக்கு என்னென்ன பின் விளைவுகள் ஏற்படும் என கேள்வி கேட்டு பதில் கடிதம் வேண்டி கடிதம் கொடுத்தேன். அதன் அடிப்படையில் பெரம்பலூர் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி **திரு.ராம்விவேக் அவர்கள் கொடுத்த மருத்துவ அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.12.2025-ம் தேதி தலைமை காவலர் திரு.விக்னேஷ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே என்னுடைய புலன் விசாரணை முடித்து எதிரி டால்டா கண்ணன் என்ற ராஜீவ் என்பவர் மீது சட்டபிரிவு 8(c) r/w 20(b)(ii)

(B) of NDPS Act-ன்படி குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தடய சொத்தினை நீதித்துறை நடுவர் பெரம்பலூர் அவர்கள் மூலமாக Drugs disposal committee மூலம் அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஜனநடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சாட்சி சொல்ல தனிநபர் யாரும் முன்வராததால் தனிநபர் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை. சாட்சி சொல்ல மறுத்த தனிநபர்களின் பெயர் முகவரியை எந்த ஆவணங்களிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். NDPS வழக்குகளில் சாட்சியாக இருக்க மறுக்கும் நபர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கலாம் என்ற விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சாட்சி சொல்ல வர மறுத்த நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு வந்த தகவலை எழுத்து பூர்வமாக எழுதி எனது உடனடி மேல் அதிகாரிக்கு அனுப்பி ஒப்புதல் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை 17.30 மணிக்கு போடப்பட்டுள்ளது. NDPS வழக்கில் சோதனை சம்மத கடிதம், அத்தாட்சி ஆகியவைகளை காவல் நிலையம் வந்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வோம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண், சட்டபிரிவுகள்

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் என்ற இடத்தில் 129 என்று எழுதப்பட்டு பின்னர் மேலெழுத்து செய்து 130 என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரை பார்க்கும் போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றதாக தெரிகிறது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் SHO சீல் வைக்கப்படவில்லை என்றால்  சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்குள்ள உரிமையை அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ சோதனை செய்ய உரிமையுள்ளது என்ற விவரத்தை எடுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. கைது குறிப்பாணையில் காலம் எண்.8ல் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து அவர் இருப்பிடத்திலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்கள் என்ற இடத்தில் NO என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை பிடிக்கவில்லை என்றும் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றும் எதிரியிடமிருந்து தடயங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் வீட்டில் இருந்த எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்று மேல் அதிகாரியின் ஆலோசனைகளின் பேரில் வழக்கு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம்

செய்து மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.